# IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No.231/2018

சாட்சி : DW2

பெயர் : பச்சமுத்து தேதி:12.11.2025

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இந்த வழக்கின் பிரதிவாதி என்னுடைய மகன். நான் பிரதிவாதியுடன் தான் வசித்து வருகிறேன். எனக்கு கோர்ட் நடைமுறைகளும் சட்டங்களும் கொஞ்சம் கொஞ்சம் தெரியும் என்றால் – சரிதான். இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.289/2013 என்ற வழக்கு ராஜேஸ் அகர்வால் மற்றும் பலர் மீது தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றாலும் அதில் நான் வாதி என்றாலும் – சரிதான். ஓமலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.182/2007 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றாலும் அதில் நான் வாதி என்றாலும் – சரிதான். இவ்வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியும்.

இந்த வழக்கில் எனது மகன் தாக்கல் செய்த எழுத்து மூலமான பதிலுரையை படித்து பார்த்தீர்களா என்றால் – படித்து பார்க்கவில்லை. இந்த வழக்கில் பிரதிவாதியான என் மகன் தாக்கல் செய்த முதல் விசாரணை நிரூபண பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் – இல்லை. எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்றால் – தெரியாது.

(சாட்சி உடல்நல குறைவின் காரணமாக எதிர்தரப்பு வழக்கறிஞர் கேட்கும் கேள்வியை புரிந்து கொண்டு சாட்சியம் அளிக்கும் நிலையில் இல்லாததால் அவரது வேண்டுகோளின் படி வாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/- S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, சேலம்.